1992 ஏப்ரல் 10]

495—

வீடுகளுக்குப் பட்டா வழங்கல்.

*1350—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், உமாரெட்டியூரில் மேட்டுப்பாங் கான இடத்தில் கட்டியுள்ள வீடுகளுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், பவானி வட்டம், அம்மாப்பேட்டை கிராமம் (உமாரெட்டியூர் மஜரா) புல எண். 414/2. நத்தம் புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்காக நத்தம் நில அளவை பணி நடைபெற்று வருகிறது. அப்பணி முடிந்ததும் அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் விரைவில் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு,—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி *இடப்பெற் றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்,)

2. சிறப்புக் குறிப்புகள்.

(அ) வேலூர் சிறையிலிருந்து ஒரு கைதி தப்பியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேலூர் சிறையிலிருந்து கைதி ஒருவர் தப்பித்துவிட்டது பற்றிய பிரச்சினையை அர சாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று திரு. ஆர். தங்கராஜ், திரு. ஆர். சிங்காரம், திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. ஜி. பழனிசாமி ஆகியோர் என்னுடைய கவனத்திற்கு கொண்டுவந்திருக்கிறார்கள். அப்பிரச்சினையை எழுப்ப அனுமதிக் கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

---

*8—4—1992 ஆம் தேதிய பட்டியலில் இருந்தது. உறுப் பினரின் வேண்டுகோளுக்கிணங்க. பேரவைத் தலைவர் அனுமதி யுடன் மீண்டும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 4-4-1992 ஆம் தேதி வேலூர் தொரப் பாடியில் உள்ள மத்திய சிறையிலிருந்து ஒரு தண்டனை அடைந்த கைதி—பிரகாசம் என்பவர். தப்பித்து இருக்கிறார். சில மாதங் களுக்கு முன்பு வேலூர் மத்திய சிறையிலிருந்து செங்கற்பட்டு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட 8 ஆயுள் கைதிகள் நள்ளிரவில் உயரமான அந்தச் சிறையின் மதில் சுவரைத் தாண்டிக் குதித்து தப்பித்துச் சென்றார்கள், சென்ற ஆண்டு வேலூர் ஜெயிலிலே இருந்து ஆயுள் தண்டனை அடைந்த கைதி தப்பித்துச் சென்றார், வெள்ளையன் ஆண்ட காலம் தொட்டு சரித்திரப் புகழ் பெற்ற சிறப்பாகப் பணியாற்றி வந்த வேலூர் மத்திய சிறை அதிகாரிகள் சில ஆண்டுகளாக கவனக் குறைவாக நடந்து கொள்வது வேதனையான ஒன்று. தமிழகத்தின் போலீஸ் திறமைக்குப் பேர்போன போலீஸ் என்பதால் ஆயுட் கைதிகளை வலைவீசிப் தேடிப் பிடித்து இருக்கிறார்கள். ஆனால் 8 ஆயுள் கைதிகளிலே தப்பியவர்களில் 7 பேர்களைத்தான் பிடித்திருக்கிறார்கள். இன்னும் ஒருவர் பிடிபடவில்லை. சென்ற சனிக்கிழமை வேலூரி லிருந்து தப்பியோடிய பிரகாசம் இன்னும் கைது செய்யப்பட வில்லை, 8 ஆயுட் கைதிகள் அன்று எப்படித் தப்பி ஓடினார்கள் என்று அறிய வேண்டி அவாவில் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தப்பி ஓடியவர் பற்றிய பிரச்சினையை என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக் கிறீர்கள். இதற்கு முன்னால் ஓடியவர்களைப் பற்றி எல்லாம் கேட்க வேண்டாம். இப்போது நீங்கள் என்ன கேட்க விரும்பு கிறீர்களோ அதை எழுப்புங்கள்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயில் மேனுவல் என்று கடுமையான விதிகள் எல்லாம் இருந்தும், சிறையிலிருந்த கைதி தப்பி ஓடியிருக்கிறார், சட்டமன்ற உறுப்பினராகிய நான் கூட ஒரு முறை அந்த ஆயுள் கைதிகளைப் பார்க்க வேண்டுமென்று சொன்ன போது. விதியிலே இடம் இல்லை என்று சொன்னவர்கள், கைதி தப்பி ஓடுகின்ற வகையில், விதிகளை அவர்கள் சரியாகக் கவனிக்காமல், விழிப்புடன் இல்லாமல் இருந்துவிட்டதன் காரணத்தாலே தப்பி ஓடிவிட்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட இப்போது ‘அலார்ம்’ வைப்பதற்கு ஒரு பெரும் முயற்சியை எடுத்திருக் கிறோம் என்று சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்தில் அதிகாரி கள் அவர்களாலான அளவுக்கு நிச்சயமாக விழிப்போடு நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை, இப்போது ‘ஆட்டோ சங்கர்’ வழக்கிலே நியமிக்கப்பட்ட இஸ்மாயில் கமிஷன் அறிக்கையை இந்த அவை

யிலே வைத்து நீங்கள் தீர ஆராய்ந்து அப்படி சட்ட விதிகளுக்கு உட்பட்டு அதிகாரிகள் ஒழுங்காகப் பணியாற்ற வேண்டும், கவனமாக அவர்கள் பணியாற்ற வேண்டும் என்பதை அறிவுறுத்தும் முகத்தான் இந்தப் பிரச்சினையை அரசின் கவனத்துற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் அவர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் தெரிவித்தது போல் 4—4—1992 அன்று சிறையில் வெளிக் குழுவிலிருந்து ஒரு சிறைவாசி தப்பித்திருக்கிறார். ஆனால் இவர்கள் தெரிவித்ததைப் போல அவர் கடுமையான தண்டனைக்கு உள்ளானவர் அல்ல. நான்கு மாத சாதாரணத் தண்டனைக்கு உள்ளானவர். வெளி வேலைக்கு எடுத்துச் சென்ற நேரத்தில் அவர் தப்பித்திருக்கிறார். அவர் தப்பிக்க உதவிய அந்த அதிகாரிகள் மீது இன்று நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. குறிப்பாக அந்த சிறைவாசி இராணிப்பேட்டை சரகத்தைச் சேர்ந்தவர். அங்கே இருக்கிற போலீஸ் அதிகாரிகளுக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. விரைவில் அந்தக் கைதி மீண்டும் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைக்கு அழைத்து வரப்படுவார்.

இரண்டு விவரங்களைச் சொன்னார்கள். நவம்பர் மாதம் 91 வரை 8 ஆயுள் கைதிகள் தப்பித்தார்கள் என்றும், அதில் 7 பேர் பிடிபட்டார்கள் என்றும் சொன்னார்கள். அவர்களில் ஒருவர் மட்டும் இன்னும் பிடிபடாமல் இருக்கிறார். அவரும் விரைவிலே பிடிபடுவார். அது போல் 13—3—1992 அன்று உள்ளிருந்து ஒருவன் தப்பிக்க முயன்றான். ஆனால் விழிப்பாக அங்கே இருந்த அதிகாரிகள் அவன் தப்பிக்காமல் காத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் கேட்டிருக்கிறார்கள். குறிப்பாக இரண்டு எச்சரிக்கைகள். ஒன்று சிறையைத் திறக்கும் போதும், மூடும் போதும் விதிகளின்படி, அவ்வப்போது நடைபெறுகிற வகையில், முன்னறிவிப்பின்றி அறைகள் மற்றும் சிறைவாசிகளைச் சோதனை செய்ய வேண்டும் என்றும், தப்பித்து ஓடுவதற்கு ஏதுவாக பொருட்கள் ஏதேனும் வைக்கப்பட்டு

உள்ளதா எனவும் தப்பித்தலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு சோதனைகளைத் தீவிரமாகச் செய்ய வேண்டும் எனவும் அங்கே இருக்கிற அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அவ்வப்போது சோதனையிடும்போது சிறை அலுவலர் முதலானவர்கள் உடன் இருக்க வேண்டும் என்றும் இன்றைக்கு வற்புறுத்தப் பட்டிருக்கிறது.

அடுத்து வார்டர்கள். இரவில் சுற்றுக்குச் செல்லும் இரவு அலுவலர்கள், பணியிடங்களில் இருக்க வேண்டிய காவலர்கள் மற்றும் கதை சொல்லும் கடிகாரம் வைத்திருக்கும் காவலர்கள் எச்சரிக்கையாகவும், முறையாகவும் பணிபுரியவும் ஆவன செய்யப்பட்டிருக்கிறது ; அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

மூன்றாவதாக, தி.மு.க. ஆட்சி பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக 1990-ல் சென்னை மத்திய சிறைச்சாலையிலே இருந்து ஆட்டோ சங்கர் மற்றும் 4 பேர்கள் தப்பித்தார்கள். பிறகு அவர்கள் சிறை வைக்கப்பட்டார்கள். அவர்கள் எப்படித் தப்பித்தார்கள் தி.மு.க. ஆட்சியில், கருணாநிதி ஆட்சியில் என்று கண்டறிய ஜஸ்டிஸ் இஸ்மாயில் தலைமையில் ஒரு குழு நியமிக்கப் பட்டது. அந்தக் குழு அரசுக்கு அறிக்கை கொடுத்திருக்கிறது. போற்றுதற்குரிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஒப்புதல் பெற்று விரைவில் அந்த அறிக்கை சட்ட மன்றத்தில் வைக்கப்படும். அதில் சில வரைமுறைகள்; எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அந்த அறிக்கை சொல்லியிருக்கிறது. அதன்படியும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஏற்கெனவே, இந்த சேஃப்டி பற்றி, அதாவது எலக்ட்ரிக் அலார்ம் 8 மத்திய சிறைச்சாலைகளிலும் வைக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அதுவும் துரிதமாக ஒரு ஆறு மாத காலத்திற்குள்ளாக அமைக்கப் பெற்றால் இப்படிப்பட்ட தவறுகள் சிறையில் நடைபெறாமல் இருக்க ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

(அ) சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் ஓட்டுநர் பயிற்சி பெற்றவர்களுக்கு பணி நியமனத்தில் முன்னுரிமை இல்லாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. திரு. பி. வி. இராஜேந்திரன் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த